மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 68/2021

பெயர் – ராமலட்சுமி (பி.வா.சா.2)

நாள் – 20.03.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் இந்த வழக்கில் மூன்றாம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் விபரத்தை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எனது அக்கா மற்றும் அம்மா சொன்ன தகவலின் அடிப்படையில் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் ஏற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் இரண்டாவது பத்தியில் மேற்படி வழக்கானது எனக்கு எனது சகோதரி மற்றும் எனது தாயருக்கு எனது தந்தை எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் இல்லாநிலையது என்று அறிவிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ள நிலையில் எனது தந்தை எனக்கு எந்தவிதமான தானசெட்டில்மெண்ட் ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உயில் மட்டும் தான் எழுதிக் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.16 ஆன உயில் ஆவணம் தான் எனது தகப்பனார் எனக்கு 13.06.2017 ம் தேதி எழுதிக் கொடுத்த உயில் ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணத்தை நான் இன்று தான் பார்க்கிறேன். 13.06.2017 ம் தேதியிலேயே எனது தகப்பனார் எனது சகோதரியான 2 ம் பிரதிவாதி ராமுத்தாய்–க்கு வா.சா.ஆ.15 ஆன உயில் ஆவணத்தை எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி ராஜாராமுக்கு எனது தகப்பனார் 02.11.2010 ம் தேதி வா.சா.ஆ.12 ஆன உயில் எழுதிக் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கும் எனது சகோதரிக்கும் 13.06.2017 ம் தேதி எனது தகப்பனார் உயில் எழுதிக் கொடுத்த பிறகு தான் அதுபற்றி தெரியும். எனக்கு, எனது சகோதரிக்கு மற்றும் வாதிக்கு எனது தகப்பனார் பிறப்பித்து கொடுத்த வா.சா.ஆ.16, 15 மற்றும் 12 ஆவணங்களை அவராகவே சுயவிருப்பத்தின் பேரில் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த விபரத்தை எனது எதிர்வழக்குரை 8 வது பத்தியில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு மேற்படி மூன்று

உயில்களும் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது என்றால் பட்டா மட்டும் தான் அவரவர் பெயருக்கு மாற்றி கொண்டோம். சொத்துக்களை தனிதனியாக அனுபவிக்கவில்லை. அனைத்து சொத்துக்களையும் எனது தாயார் தான் அனுபவித்தார். வா.சா.ஆ.12, 15, 16 சொத்துகளை பொறுத்து எனது சகோதரிக்கோ, வாதிக்கோ, எனக்கோ எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கொடுத்த சொத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். நான் எனது தாயார் மற்றும் அக்காவுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் மீதுதானே வழக்கு தாக்கல் செய்துள்ளார். 3 ம் பிரதிவாதி என்ற தனிபட்ட நிலையில் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும், எனது தாயார் மற்றும் சகோதரிக்கு அனுசரணையாக இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது அம்மாவுக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.4 ஆவணமான செட்டிமெண்ட் ஆவணத்திலோ, எனது தகப்பனார் எனது சகோதரியான 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.13 ஆவணமான தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலோ, நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்கள் எப்போது எப்படி எந்த சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பக்கவாத நோய் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். 2019 ம் ஆண்டில் நான், எனது சகோதரி மற்றும் தாயார் ஆகியோர்கள் சேர்ந்து எனது தகப்பனாரிடம் சொத்து கேட்டு அவரை இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டில் நான், எனது சகோதரி மற்றும் தாயார் சேர்ந்து எனது தகப்பனாரிடம் சொத்து கேட்டு இடையூறு செய்ததால், எனது தகப்பனார் கீழே விழுந்து மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கீழே விழுந்ததால் தான் அவரை மருத்துவமனையில் சேர்த்தோம். நாங்கள் கொடுமைபடுத்தவில்லை. எனது தகப்பனார் ஏற்பட்ட மருத்துவ செலவுகளை எனது சகோதரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருடைய பணத்தை நாங்கள் எனது சகோதரரிடம் கொடுத்து செலவு செய்தார். வாதி சிவகாசி இந்து நாடார் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகளை எனது சகோதரரான வாதி தான்

செய்தார் என்றாலும், எனது தகப்பனாரின் பணத்தை கொண்டு செலவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அது என்னுடைய தகப்பனாரின் பணமாகும். எனது தகப்பனாருக்கு வா.சா.ஆ.12, 15, 16ல் கண்டுள்ள சொத்துக்களை தவிர பிறவிபட்டி, சுந்தரன்குடும்பன்பட்டி, செட்டுடையான்பட்டி, அம்மாபட்டி ஆகிய ஊர்களில் நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். அந்த ஊர்களில் உள்ள சொத்துக்களை கேட்டு நான், எனது தாயார் மற்றும் சகோதரி எனது தகப்பனாரிடம் கேட்டதால் தான் எனது தகப்பனாருக்கு மீண்டும் மீண்டும் மருத்துவமனை செல்லும் சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. இரண்டாவது முறையாக எனது தகப்பனாரை கடந்த 2020ல் மருத்துவமனையில் அனுமதித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அப்போது எனது தகப்பனாரை எனது சகோதரர் தான் நல்ல முறையில் பார்த்து அவரது வீட்டிற்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் ஹவுஸ்சிங் போர்டில் எனது அக்கா இருந்த வீட்டில் வைத்து பார்த்துக் கொண்டோம். நான் சொல்லுவது போல் எனது தகப்பனாரை நாங்கள் ஹவுஸ்சிங் போர்டில் உள்ள வீட்டில் வைத்து பார்க்கவில்லை என்றாலும், வாதியுடன் இருந்த எனது தகப்பனாரை வாதி பணிக்கு சென்றிருந்த நேரத்தில் போய் நான், எனது சகோதரி மற்றும் தாயார் சேர்ந்து சுந்தரக்குடும்பன்பட்டிக்கு தூக்கி வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. எனது சகோதரரான வாதி தான் ஹவுஸ்சிங் போர்டில் இருந்த எனது தகப்பனாரை சாமியார் காலனிக்கு தூக்கி சென்றார். எனது தகப்பனார் அதனை வேண்டாம் என்று மறுத்தார். எனது சகோதரரான வாதி தான் ஹவுஸ்சிங் போர்டில் இருந்த எனது தகப்பனாரை சாமியார் காலனிக்கு தூக்கி சென்றார் என்றும், எனது தகப்பனார் அதனை வேண்டாம் என்று மறுத்தார் என்றும், நான் சொல்லியுள்ள மேற்படி விபரத்தை எதிர்வழக்குரையிலோ, எனது நிரூபண உறுதிகூற்றிலோ சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. நான் சொல்லுவது போல் எனது சகோதரர் எனது தகப்பனாரை தூக்கி செல்லாத காரணத்தினால் தான் மேற்படி விபரம் பற்றி எதிர்வழக்குரையிலோ, நிரூபண உறுதிகூற்றிலோ நான் சொல்லவில்லை என்றாலும், உண்மையிலேயே அவ்வாறு நடந்திருந்தால் அதுபற்றி நான் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை வாதி தூக்கி சென்ற போது நான் அதை மறுக்கவில்லை, ஏனெனில் எனது தகப்பனார் எனக்கும் தகப்பனார், வாதிக்கும் தகப்பனார் என்பதால் தான், எனது

தகப்பனார் தன்னை தூக்கி செல்ல வேண்டாம் என்று கையெடுத்து கும்பிட்டும் வாதியும், ஆட்டோ ஓட்டுநரும், தங்கம் என்பவரும் எனது தகப்பனாரை தூக்கி சென்றுவிட்டனர். தங்கம் என்பவர் எனது அண்ணனின் மைத்துனர் ஆவார். ஆட்டோ ஓட்டுநரை எனக்கு தெரியாது. தங்கம் என்பவரை விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது தகப்பனாரை தூக்கி சென்ற விபரத்தை பொறுத்து அம்மாபட்டி காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்து, அதன் அடிப்படையில் என் மீதும், எனது சகோதரி மீதும் விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கவில்லை. காவல் துறையினர் வீட்டிற்கு வந்து எனது தகப்பனாரை விசாரித்தார்கள். சாமியார் காலனியில் இருந்த எனது தகப்பனாருக்கு பக்கத்து விட்டில் உள்ள வள்ளியம்மாள் என்பவர் தான் உணவு கொடுத்து வந்துள்ளார். எனது சகோதரி எனது தகப்பனாரை சாமியார் காலனிக்கு சென்று பார்த்த போது எனது தகப்பனார் தன்னை சுந்தரக்குடும்பன்பட்டிக்கு கூட்டிச் செல்லுமாறு கேட்டு கொண்டதன் பேரில் தான் எனது சகோதரியும், ஆட்டோ டிரைவரும் போய் எனது தகப்பனாரை சுந்தரக்குடும்பன்பட்டிக்கு தூக்கி வந்தார்கள். மேற்படி விதமாக எனது தகப்பனாரை சுந்தரக்குடும்பன்பட்டிக்கு தூக்கி வந்ததும், அதற்கான காரணமும் வழக்கிற்காக சொல்லும் காரணம் என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு குடும்பம் சாமியார் காலனியில் கிடையாது. அவரது குடும்பம் திருத்தங்கலில் உள்ளது. எனது தகப்பனாருக்காக வேண்டி பள்ளிக்கு சென்றுவிட்டு இரவில் வந்து எனது அண்ணனான வாதி சாமியார் காலனியில் உள்ள வீட்டில் தங்கினார். வாதி சாமியார் காலனியில் தான் குடியிருந்தார் என்றால் சரியல்ல. சாமியார் காலனியில் வீடு இருந்தாலும், எனது அண்ணன் ஒரு போதும் சாமியார் காலனியில் குடியிருக்கவில்லை. குடும்பத்தோடு திருத்தங்கலில் தான் குடியிருந்து வருகிறார். அம்மாபட்டி காவல் நிலையத்தில் வாதி கொடுத்த புகாரை எனது சகோதரியின் கணவர் தொழிற் சங்க தலைவராக இருந்ததை பயன்படுத்தி நிர்த்துபோக செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்தே நல்ல தெளிவான மனநிலை இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சொல்லுவதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்றாலும், அவர் ஒன்கொன்று தொடர்பில்லாமல் பேசி வந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அப்போது யார் என்ன சொன்னாலும் சரி அவரது நலனுக்கு அது

விரோதமாக இருந்தாலும் கூட அதை செய்யும் நிலையில் சுய சிந்தனையில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நல்ல அறிவோடு இருந்தார். எனது தகப்பனார் அவ்வாறு இருந்த சூழ்நிலையை பயன்படுத்தி தான் எனது தாயார் மற்றும் சகோதரிக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்களை பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு எனது தகப்பனார் எழுதிக் கொடுத்த உயில் ஆவணத்திலேயே அவரது ஆயுளுக்குள் ரத்து செய்வோ, மாற்றம் செய்யவோ, அதிகாரம் உள்ளது என்று எனது நிரூபண உறுதிகூற்று பாரா மூன்றில் குறிப்பிட்டுள்ள நிலையில் எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை அவர் வாதிக்கு எழுதிக் கொடுத்த உயிலை ரத்து செய்வோ, மாற்றம் செய்வோ, எந்த விதமான எழுத்து மூலமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எங்களது அதிகாரத்தை பயன்படுத்தி எங்கள் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ளவாறு எனது அப்பா, எனது தாயார் மற்றும் சகோதரிக்கும் எழுதிக் கொடுத்த உயிலானது அவரது சுய விருப்பத்தோடு எழுதிக் கொடுக்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை எனது தகப்பனாருக்கும், எங்களுக்கும், சார்பதிவாளருக்கும் வாதி அனுப்பினார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும், அந்த அறிவிப்பில் உள்ள விபரங்கள் உண்மை என்பதால் தான் அதுபற்றி எதிர்வழக்குரையிலோ, நிரூபண உறுதிக்கூற்றிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த மனநிலையில் எனது தகப்பனார் எனது சகோதரிக்கும், தாயாருக்கும் வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்களை பிறப்பித்து கொடுத்தார் என்ற விபரத்தை ஆவண பதிவின் போது சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எடுக்கப்பட்ட வீடியோ பதிவுக்காக எங்களுக்கு கொடுக்கப்பட்ட சிடிஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனது தகப்பனார் எப்போது, யார் முன்னிலையில், எங்கு வைத்து வாதிக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.12 ஆவணத்தை கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தை எனது தகப்பனார் கேட்டதாக சொல்லியுள்ள விபரம் பொய் என்பதால் தான் அதுபற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தை விருப்பப்பட்டு எனது தகப்பனார் வாதிக்கு எழுதிக் கொடுத்ததால் தான்

எனது தகப்பனார் எனது சகோதரிக்கும், எனது தாயாருக்கும் எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணத்தில் அதுபற்றி யாதொன்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணம் எனது தந்தையின் விருப்பத்திற்கு விரோதமாக எழுதிக் கொடுக்கப்பட்டது என்றாலும், அந்த ஆவணங்களில் உள்ள எனது தகப்பனாரின் கைரேகை வலுக்கட்டாயமாக அவரது இசைவின்றி 1 மற்றும் 2 பிரதிவாதிகளான எனது தாயார் மற்றும் சகோதரியால் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நிறைய கையொப்பம் செய்ய வேண்டி இருந்ததால் எனது தகப்பனார் கொஞ்சம் கையெழுத்துக்களை செய்தார். அதற்கு பிறகு முடியவில்லை என்று சொன்னதால் தான் கைரேகை வைத்தார். எனது தகப்பனார் கையொப்பம் செய்ததாக சொல்லும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கொடுக்கவில்லை. ஆனால் எனது தகப்பனார் வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணம் குறித்து கையொப்பம் செய்து கொடுத்த ஆவணம் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கின் தன்மை தெரியாமல் எனது தாயார் மற்றும் சகோதரிக்கு அனுசரணையாக நான் தெளிவில்லாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதாக உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.